MAY 2022 **P/ID 35316/PTL2F**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க.

1. உ.வே.சா.அவர்களுக்குச் 'சாமிநாதன்' எனப் பெயரிட்டதற்கான காரணத்தை எழுதுக.

2. உ.வே.சா.அவர்களின் புறநானூற்றுப் பதிப்பின் தனித்தன்மையினை எழுதுக.

3. மனிதப் பிறவியின் மாண்பினை உணர்த்தும் திரு.வி.க. அவர்களின் செம்மொழிக் கூற்று இரண்டினை எழுதுக.

4. பெற்றோர் மன நிலை எவ்வாறிருக்க வேண்டும் எனத் திரு.வி.க. கூறுகிறார்?

5. கைராட்டினத்தை உயிர்ப்பிக்க காந்தியடிகள் மேற்கொண்ட முயற்சி யாது?

6. மார்த்தாண்டனின் பண்புநலன்களை எழுதுக.

7. 'காற்று' சிறுகதையில் கற்பகம் பெற்றோரிடம் வேண்டுவது யாது?

8. 'நரிக்குறத்தி' சிறுகதையில் குறவன் ஐயத்தைத் தெளிவித்த காட்சி யாது?

9. ‘கதவு’ சிறுகதையில் சீனிவாசன் ஆசையுடன் முத்தம் கொடுத்தது குறித்து எழுதுக.

10. ‘இவன்’ சிறுகதையில் மாப்பிள்ளை நாணப்படாத செயலாக எச்செயல் குறிப்பிடப்படுகிறது?

11. ‘உயிர்கள்’ சிறுகதையில் தங்கையன் ஆசிரியரிடம் கேட்ட கேள்வியினை எழுதுக.

12. ‘மிதப்புகள் முறியும்’ சிறுகதையில் கோவிந்தனின் மிதப்பினை முறித்தவர் குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

13. உ.வே.சா. அவர்களின் அரியலூர் வாழ்க்கை குறித்து எழுதுக.

14. உ.வே.சாமிநாதையரின் கலையறிவு குறித்து எழுதுக.

15. அறிவு விளக்கம் பெறுவது குறித்து திரு.வி.க. கூறுவன யாவை?

16. காந்தியடிகளின் ‘சத்தியாக்கிரகம்’ - பெயர்க் காரணத்தை எழுதுக.

17. அரண்மனையில் அரசர் திருமாலை வணங்கி நின்ற நிலையினை எழுதுக.

18. கற்பகத்தின் மன உணர்வுகளை ‘காற்று’ சிறுகதை உணர்த்தும் திறத்தை எழுதுக.

19. ‘இவன்’ சிறுகதை ஆண்களின் கொடூர மனத்தினைக் காட்சிப்படுத்துவதனை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. தமிழ் இலக்கிய வரலாற்றின் ஆவணம் ‘என் சரித்திரம்’ என்பதனை நிறுவுக.

21. “பகுத்தறிவுடைய மனிதனின் கடமை கடவுளை அறிவதே” என்பதனைத் திரு.வி.க. கூறும் சான்றுகளுடன் விரித்தெழுதுக.

22. பத்மாவதியை மணமுடிக்க முடியாதெனக் கூறிய ரவிவர்மனுடன் சேரமான் நிகழ்த்திய உரையாடல் குறித்து விரித்துரைக்க.

23. ‘தேங்காய்த் துண்டுகள்’ கதையின் வழி மு. வரதராசனாரின் படைப்புத்திறனை ஆய்க.

24. ‘யுக சந்தி’ என்னும் சிறுகதையின் பெயர்ப் பொருத்தத்தினைக் காட்சிகளின் வழிநின்று புலப்படுத்துக.

———————